உ

குகமயம்

சந்நிதி முருகன்

செஞ்சொன் மாலை

நூல்

1. சந்நிதி அரசே தனிவேலவனே
பன்னிரு புயனே பழமறை விளைவே
என்னிருள் இரிய இதயத் தளியுள்
மன்னிய முதலே வருவாய் அருள்வாய்

2. அருளே பொழியுந் தனிநா யகனே
பொருளே மொழியுங் குருமா மணியே
அருவே உருவே அறிவே திருவே
மருவும் பிடியைத் தடிவாய் மயிலோய்

3. மயிலோய் முருகா மருவும் அடியார்
பயிலும் பொருண ீபழநிக் குமரா
அயில்வே லரசே அரனார் சுதனே
இயலும் வகையிங் கேத்தற் கருள்வாய்

4. வாயே நினதாள் வனசம் வாழ்த்தச்
சேயே முருகா திருமால் மருகா
சாயா அருளைத் தருவாய் தருவாய்
தாயாய் எனையாள் தற்பர குருவே

5. குருவே சரணங் குழகா சரணம்
உருகும் அடியார் உளமாளிகையில்
பெருகும் ஒளி பீழைத் துயர்கள்
ஒருவும் வகைநீ உடையாய் அருள்வாய்

6. உடையாய் அருளாய் அடிமை எனவே
இடையிற் றமியே மின்னற் படுதல்
அடைவோ முருகா அறுமா முகனே
நடையில் இனியார் தனிநா யகனே

7. தனிநாயகனே தணிகா சலனே
பனிமா மதிசேர் பரமன் புதல்வா
இனிநீ தமியேற் கருளா விடினே
எனையார் அஞ்சல் என்பர் எந்தாய்

8. எந்தாய் சரணம் இறைவா சரணம்
கந்தா சரணம் கதிர்வேல் முருகா
நொந்தோ மினியே நுவலப் படுமோ
சிந்தா குலமே தீர்த்திங் கருளாய்

9. அருளாய் எங்கள் குடியின் முதல்வா
பொருளார் மறைகள் புகழும் புலவா
மருவார் கடம்பா மணியே மயிலில்
வருவாய் அலையோ வானின் மிசையே

10. வானின் மிடைநீ வடிவே லரசே
தேனின் மொழியார் உடனாய் வரவே
ஞானஞ் சிறிது மில்லோம் முனைநாட்
பேணுந் தவமே பெரிதே பெரிதே

11. பெரிதே வதனங் கருணை பெருகும்
விரியும் விழிகள் வினைகள் தடியும்
புரிபுன் நகையிற் புலமை வளரும்
இரியும் உறுநோய் பதமென் மலரால்

12. மலரான் நினையே மதியா வகையால்
சிலபோழ் தவனைச் சிறைசெய் தனையால்
சலமில் பரமன் தழுவிக் கேட்ப
நலமார் பொருணீநவின்றாய் குருவே

13. குருவே முருகா குழகா குமரா
திருவே செந்தூர்த் தேவா தேவர்
பரவும் வகைநீ அவுணர் கிளையை
வருவேல் தொட்டே புரந்தாய் அலையே

14. புரந்தாய் அலையோ புலவன் கீரன்
தருநல் ஆற்றுப் படைதான் கொண்டே
இரந்தார்க் கருளும் இறைநீ அலையோ
தெரிந்தே தமிழ்தான் செய்தற் கருளாய்

15. அருளாய் நல்லை அமருங் குருவே
இருள்வாய் எளியேம் இடருற் றனமால்
பொருளார் மறையின் முடிவாம் புலவா
மருவார் கடம்பா உமையாள் மகனே

16. மகனே அரனார் மகிழுங் குமரா
அகமே புகுந்தாய் அன்பு றுருகேன்
தகவே இல்லாத் தனமே விழைவேன்
நகவே தகுமே நாயேன் நிலையே

17. நிலையே இல்லாப் பொருளை நச்சி
அலைவார் அடையும் அல்லல் கண்டும்
நிலையாம் பொருளாம் நின்தாள் பணியேன்
மலைவுற் றுழல்வேன் மணியே தகுமோ

18. மணியே தகுமோ மயல்கொண் டுழல்தல்
பணியா எழுவார் படர்நோய் களைவாய்
அணியார் கடம்பா அழகா குழகா
தணிகா சலனே தனிவேல் அரசே

19. அரசே அன்பர்க் கருளும் வகைநீ
உரைசேர் பதிகள் உறைவாய் எனினும்
புரைசேர் தமியேன் மனப்புன் குடிலும்
பொருளாய் எண்ணிப் புகுந்தாய் தகுமே.

20. தகுமே முருகா தமிழா இணையோய்

அகமே குழையேன் அன்புற் றுருகேன்
நகவே திரிவேன் நாணம் இல்லேன்
மிகவே நொந்தேன் மிடியால் எந்தாய்

21. எந்தாய் முருகா கந்தா குமரா
மைந்தா ஞானப் பழம்நீ மணியே
நொந்தார் துயர்கள் துடைக்கும் வேலலோய்
வந்திங் கருளா வகைதான் அழகே

22. அழகா அமலா ஒழுமாங் கனிக்காய்
குழகா உலகை வலம்நீ கொண்டாய்
பழகா வினையேன் மிடிநோய் தடிய
இளையோய் இரங்கா வகைதான் எதுவோ

23. எதுவோ அடியர் இதயக் கோயில்
அதுவே பதியாய் அமருங் கடம்பா
புதுவசீ சூடும் மலையான் மகனே
இதுவே சமயம் ஏழைக் கருள்வாய்

24. அருள்வாய் எனவே அடியார் குழுமிங
உருகா மொழியும் உயர்சீர் தெரியேன்
பெருகா வருபேர் ஆசைக் கடலில்
திருவே விழுவேன் தகுமோ முறையோ

25. முறையோ எனவே வாளா மொழிகேன்
இறையும் தவமே எந்தாய் புரியேன்
உறவாய் அடியார் உடன்நான் பழகேன்
நறையார் மலரால் நானும் பணியேன்

26. பணியேன் முருகா பயிலும் பதிகள்
அணியார் துறைகள் ஆடேன் உருகேன்
பிணியார் தொடரப் பெரிதும் உழல்கேன்
மணிநீ குருவாய் வருநாள் எதுவோ

27. எதுவோ நினதாள் பரவும் பரிசே
அதுவே தெரிந்தால் அமிழ்தத் தமிழால்

புதுமென் தொடைகள் புனைந்தார் குழகா
இதுவே தருணம் ஏழைக் கருள்வாய்.

28. ஏழைக் கருள்வாய் என்பார் முருகா
பீழைத் துயர்கள் பெரிதும் வருத்த
ஆழக் கடலில் துரும்பாய் அலைகேன்
வாழத் துணைசெய் வடிவேற் கரனே.

29. கரனே தனிவேற் கடம்பா குமரா
பரனே எனையாள் பவனீஅலையோ
வரம்நீ அருளா வகைதான் நன்றோ
குருவே என்றன் குறைகே ளாயோ

30. கேளாய் உள்ளாய் கேடில் அன்பர்
மீளாய் துயரில் மெலியும் போழ்தில்
வாளா இருத்தல் வடிவோ பெரியோய்
தாளைப் பிடித்தேன் தருவாய் தனமே.

31. தனமும் குணமும் தகவுந் தயவும்
தினமும் நினதாள் சேவித் துருகும்
மனமும் அறிவும் மாண்பும் அருள்வாய்
வனமென் கொடிதோள் மருவும் முருகா

32. முருகன் குமரன் முனிபுங் கவர்கள்
உருகுஞ் செயல்கள் அருளும் திருவன்
பெருகுந்த தமிழாற் றொழுவார் பிணிகள்
வெருவும் வகையே விறல்தந் தருள்வான்

33. வானாய் நிலவாய் வளிதீ நீராய்
ஊனாய் உயிராய் உளதாய் இலதாய்க்
கோனாய் எங்குங் குலவும் பொருளாய்
ஆனான் முருகன் அவன்என் தலைவன்

34. தலைவன் முருகன் தனிவேல் அரசன்
கலையின் பயனாம் கருணைக் குரவன்
வலைபட் டுழலும் மானேர் அடியார்

நிலைகண் டருளும் நிகரில் கடவுள்

35. கடவுட் குமரன் கல்நெஞ் சினரும்
இடருற் றனராய் எந்தாய் முறையோ
படர்தீர் என்றே பரவித் தொழவே
திடனாய் அருள்வான் சேவித் திடுமின்

36. சேவித் திடுமின் முருகன் தனையே
ஆவித் துணைவன் அவனே அறிமின்
பாவச் செயல்கள் படிமீ தொழிமின்
நாவில் முருகன் நாமம் புகல்மின்

37. புகல்மின் புலவீர் குமரன் புகழே
புகலிங் கவனே புதுவாழ் வருள்வான்
அகமா ளிகையில் அமர்ந்தான் பிணிகள்
அகலும் தொழுமின் அவன்றாண் மலரே

38. மலர்மீ துறைவோன் மகவான் முதலோர்
பலரும் அழகன் பணிகள் புரிவார்
சிலபோழ் தெனினும் செவ்வேட் கடிமை
நலமே புரியா வகைதான் நன்றே

39. நன்றே அருளும் நாடிப் பணிமின்
குன்றஞ் சிதையக் கூர்வேல் தொட்டோன்
மன்றுள் ஆடும் மணியின் மதலை
என்றும் இளையோன் இருதாளிணையே

40. இணையிங் கெவரும் இல்லா எழிலோன்
பிணைநேர் குறமின் பேதை யுடனாய்
அணைகுஞ் சரியார்க் கருளா வருவேள்
துணைன் றுயர்தாள் தொழுவார் பெரியோர்

41. பெரியோர் பரவும் பெருமான் முருகன்
அரியும் அயனும் அறியா அழகன்
விரியுந் துயர்கள் விறல்கெட் டகலப்
புரியும் நகையே புகலிங் கறிமின்

42. மின்னார் உருவ மயில்மேல் வருவேள்
என்னார் உயிராய் எங்கும் நிறைவான்
நன்னாவலர்கள் நாடுங் குரவன்
தன்னாரடியென் தலைக்கொண்டேனே

43. கொண்டேன் எளியேன் குகனைப் பதியாய்
அண்டர் பணிவார் அழகன் பதமே
வண்டூதா மென் மலர்கொண்டடியர்
தொண்டே புரிவார் துயரொன்றிலரே

44. இலரே வினையால் இடருற் றுழல்தல்
பலரும் பரவுங் கதிரைக் கடவுள்
புலவன் குழகன் உமையாள் புதல்வன்
மலர்மென் தாள்கள் மறவா நின்றோர்

45. நின்றோர் மாவாய் நிலையில் அறிவாற்
கன்றுஞ் சூர்க்குங் கருணை செய்தான்
குன்றில் ஆடுங் குமரப் பெருமான்
என்றும் இனியன் இளையோன் தொழுமின்

46. தொழுமின் அன்பர் துயரந் தீர்க்கும்
அழுமின் அடியார் அவலம் அகற்றும்
விழுமின் பவநோய் வினைகள் தடியும்
எழுமின் அலைவாய் எந்தை துணையே

47. துணையாய் வருவான் வனமின் கொடியும்
இணையில் வான்மின் இழையும் பயிலப்
பிணையார் திருவே ரகன்றாள் மலரே
புணையாக் கொண்டார் புலம்மிக்காரே

48. மிக்கார் பரவும் விமலன் முருகன்
மைக்கார் முகிலூர் மகவான் மகள்கோன்
புக்கார் வினைகள் பொடிபட் டிரியத்
தக்கோன் விடுவான் தனிவேல் பணிமின்

49. பணிமின் பரங்குன் றுடையான் பதமே
பிணிகள் அகலும் பீடுற்றிலாம்
அணிர் வள்ளி அன்னை கொழுநன்
தணியாக் கருணை தனமே தனமே

50. தனமே விழைவரீ தனிவே லண்ணல்
இனமா மவுணர் கிளையிங் கிரிய
முனமே பொருதான் முதிரும் அன்பாற்
றினமும் பணிமி றீரும் மிடியே

51. மிடியின் குன்றம் பொடிபட் டகலச்
சுடர்வேல் கடவுஞ் சோலைக் கிழவன்
கடிமென் மலர்த்தாள் காதல் கொண்டே
படியில் பரவும் தவமே தவமே

52. தவமே பயிலுங் குடமா முனிக்கும்
சிவனார் மகிழுஞ் செவ்வேட் குமரன்
நலமார் தமிழை நவின்றான் அறிமின்
அவமே உழல்வரீ அவனே குரவன்

53. குரவன் அழகன் கோழிக் கொடியோன்
பரவும் அடியார் படர்நோய் தடிவோன்
இரவும் பகலும் ஏத்திப் பணிந்தால்
வரமுற் றிடலாம் வாழ்வும் இனிதே

54. இனிதே மயில்மேல் இருவர் குலவத்
பனிமாக் கடல்மேற் பரிதி எனவே
தனிவேற் பெருமான் தானே வருவான்
இனிய தவலம் இன்பம் பெருகும்

55. பெருகுங் கருணைப் பெருமான் முருகன்
திருமிக் குயருஞ் செந்திற் பதியான்
ஒருகைக் களிற்றின் உரிமைத் துணைவன்
கருதிப் பணிமின் கவலை அகலும்

56. அகலுந் தடமார் புடையான் அவுணர்

இகல்வென் றிடுவேல் இளையோன் இமையோர்
அகநொந் துருக அருள்வோன் அடியார்
புகலென் றுள்ளான் புகழ்வரீ இனிதே

57. இனிதே இபமா முகவன் அருளக்
கனிவாய்க் குறமின் தோள்தோய் கடவுள்
எனையாள் தலைவன் எழில்மிக் குடையான்
வனைமென் கழல்கள் வாழ்த்திப் புகழ்வரீ

58. புகழ்வரீ சிறுவாழ் வுடையோர் தமையே
மகிழ்வரீ உலகீர் மற்றிங் குறுதி
இகல்வேற் பெருமான் இணையார் அடியே
புணையாய்ப் புகுமின் துயர்நோய் துகளே

59. துகளே படவே கிரியன் றொருகால்
இகல்வேல் தொட்டான்; இனியும் முருகன்
மிகவே பணி என்றன் மிடியும்
பகவே விடுமே தனிவேல் இனியே

60. இனிதே முருகன் எனையிங் கோம்பிச்
கனிநேர் தமிழைப் பருகத் தந்தான்
புனையேன் மாலை போற்றேன் பாதம்
வினையேற் கருளும் விமலன் பெருமான்

61. பெருமான் பிறைசேர் அமலன் மதலை
திருமால் மருகன் தெரிசெந் தமிழில்
பெருமால் கொண்டோன் பீடார் கோழி
வருசீர்க் கொடியோன் வாகைத் தோளான்

62. வாகைத் தோளான் வளர்செந் தமிழ்நூல்
ஓகை பெறவே உணர்ந்தார்க் கினியோன்
ஈகைத் தொழிலே என்றும் புரிவோன்
தோகை மயில்மேற் றோன்றுங் குமரன்

63. குமரன் அழகன் கூர்வேற் பெருமான்
அமரர் பரவும் அறுமா முகவன்

நமனார் கிளைஞர் நலியா வகையே
எமையாள் கருளைக் கடலாம் இறைவன்

64. இறைவன் எந்தாய் இருவர்க் கினியன்
நறைமென்நீபத் தொடையார் தோளன்
துறையார் கடல்சூழ் செந்திற் கடவுள்
பிறையார் சடையோன் உதவும் பிள்ளை

65. பிள்ளைக் கிளிநேர் மொழியார் குலவ
வள்ளற் பெருமான் மயில்மேல் வருவான்
அள்ளித் தருவான் அறிவுந் திருவும்
உள்ளக் குகையில் உலவுங் குமரன்

66. குமரன் குழகன் குகனென் றேத்தி
அமரர் பரவும் அயில்வேல் அண்ணல்
தமரங் குலவுந் தண்டைத் தாள்கள்
இமிழ்நீர் உலகில் இன்பப் புணைகாண்

67. காணக் கழறக் கருதக் கணமும்
யாணர்ப் புதுமா மலரொத் திலகும்
நீணற் பதமே தருவான் குமரன்
பேணற் கெழுவீ பிறவிப் பயனே

68. பயனே பழநீ அலையோ எனவே
கயல்நேர் விழியோ டிறைவன் கழல
நயனுற் றிந்த ஞாலம் வாழப்
பயனார் பழநி அமர்ந்தான் பாலன்

69. பாலன் இவனும் பரனோ எனவே
காலுங் கனல்வெஞ் சூரன் கழறக்
கோல மயிலாக் கொடியாய் கொண்டான்
ஆலம் உண்டான் அருளும் அமலன்

70. அமலா முருகா அழகா குழகா
விமலா விறலோய் வேற்கைத் தலைவா
உமையாள் புதல்வா உயர்சீர் அரசே

எமையாள் தருணம் இதுவே இறையே

71. இறையே எளியேம் இடர்கண் டின்னும்
இறையும் அருளா இயல்விங் கினிதோ
நறையார் குழலென் தாயார் நாடி
அறையார் தாங்கொல் அடியேன் நிலையே.

72. நிலையே அருளின் நிறைவே முருகா
மலைமீ தாடும் மணியே வருவாய்
வலைபட் டுழலும் பிணையின் வகையாய்
அலைபட் டுழல்வேன் அறியா வகையென்

73. அறியா வகையே குறமா மகள்தோள்
நெறியா வணையும் நீபத் தொடையாய்
உறவாய்க் கிளையாய் உயிராய் உளையால்
நறையார் பதமே நாளும் பணிவேன்

74. பணிபூண் பரமன் பழையோன் பகவன்
பணிபூண் அமரர் படர்நோய் களையப்
பணிபூண் பரிசே உதவுங் குமரன்
பணிபூண் மனனே பவநோய் இலையே

75. இலைவேல் உடையோன் இறுமாந்தெழுசூர்
மலைநேர் உரமுங் கிரியுங் கெடவே
அலைசெய் தமரர்க் கருளும் திருவோன்
நிலையார் பதமே நிதமும் தொழுமின்

76. நிதமும் தொழுவார் நிலைமிக் குயர
விதமாம் இன்னல் வெந்தீப் பெய்தே
இதமாய்ப் புட்மிட் டெழில்கூட் டிடுவேள்
பதமா மலரே பணிவாய் மனனே

77. மனனே கதிரைக் குமரன் முருகன்
வனமின் கொடிதோள் மருவும் விமலன்
நினைவார் துயர்கள் நீக்கும் விறலோன்
தனமும் தவமும் தகவும் தருமே

78. தருமே வியசீர் மகவான் மருகா
குருமா மணியே குகனே குமரா
உருகுந் தொண்டர் பரவிப் பணியத்
தருவாய் அலையோ பதமென் மலரே!

79. மலரே மதியே அரவே அணிவோன்
குலவும் மதலைக் குமரப் பெருமான்
இலகும் வதனத் தெழிலால் அன்பர்
கலகக் கவலைக் கடுநோய் கடிவான்

80. கடிவான் மதில்சூழ் நல்லைக் கிழவன்
துடிநேர் இடையார் இருவர் கொழுநன்
முடிவில் அருளே பொழியும் முதல்வன்
அடியார் அவலம் அகலும் வகையே

81. வகையே உலகம் வாழச் செவ்வேள்
தகைசால் மயில்மேற் றானும் வருவான்
தொகைசேர் அடியார் கூடித் தொழப்புன்
நகையால் அருளை நாளுந் தருவான்

82. வானத் தமரர் குலகா வலனே
ஞானத் தனிவேற் குருநா யகனே
பானத் தியசீர் மொழிசேர் உமையார்
ஞானப் பழமே நாயேற் கருளே!

83. அருளே வடிவாய் நிலவும் அரசே
உறவே உயிரே உணர்வே திருவே
கறையார் கண்டன் மகிழுங் குருவே
வருவாய் அல்லல் வகையே களையாய்

84. கணைவாய் முறையோ தரியேம் எனவே
கிணையோ டீண்டி இமையோர் வேண்ட
உளையா உறுதி அவுணர் அவிய
இளையோய் பொருதாய் எந்தாய் எந்தாய்

85. எந்தாய் ஆதி எந்தை ஆனாய்
முந்தும் சுற்றம் முதலும் ஆனாய்
நந்தும் அறமே நல்வே லரசே
வந்துன் கழலே தந்தாள் பரனே

86. பரனே சரணம் பதியே சரணம்
விரைசேர் நீலத் தொடையாய் சரணம்
உரையும் பாட்டும் உடையாய் சரணம்
பரைதந் தருளும் பாலா சணம்

87. சரணஞ் சரணஞ் சந்நிதி முருகா
அருணோ தயநீ அன்பர் வாழ்வின்
தருணங் குமரா தமியேற் கருளாய்
கருணா கரனே கந்தா குகனே

88. கந்தா குகனே கயிலைக் கடவுள்
தந்தே உதவுந் தமிழ்மா மணியே
சிந்தா குலமே தீர்க்கும் அமிர்தே
வந்தாள் எனைநீ வடிவேல் உடையோய்!

89. உடையோய் வாவா உயிரே வாவா!
விடைவாய் அருளும் விகிர்தா! வாவா!
படைவேல் உடைய பரமே! வாவா!
இடையேம் வாழக் கந்தா அருளே

90. அருளே அடியார் வாழ்வின் அவல
இருளே தடியும் இளமென் ஒளியே
மருவே மலரே அடியார் தேடுந்
திருவே சரணந் திறல்வே லரசே

91. அரசே சிவசண் முகனே! அழகே!
வரனே அமராபதிவாழ் குகனே
பரவி உருகிப் பணிபுரியும் பரிசே
தரநீ தலைவா எந்நாள் வருவாய்!

92. வருவாய் என்றே பெருமால் உற்றே

உருகுந் தமியேன் உயர்புற் றிடவே
திருமால் மருகா செல்வக் குமரா
வருவாய் வந்தென் வாட்டாந் தீராய்

93. தீரா! வரீா! சேவற் கொடியோய்!
ஆராக் காதல் கொண்டேன் அடிமை
பாராய் ஒருகால் பார்த்தென் துயரம்
தீராய் தீராய் தேவர் தலைவா

94. தலைவா கௌரி தனையா சரணம்!
அலைவாய் அமரும் ஐயா சரணம்
மலைமீ தாடும் மணிணே சரணம்
கலையின் வடிவாங் கந்தா சரணம்

95. சரணம் என்றே சார்வார் முனிவோர்
அரணம் என்றே அடைவார் தேவர்
இரணம் செய்யும் நெடுவேல் எந்தாய்
தருணம் இதுவே தயைநீர் புரியும்

96. புரியும் அன்பாற் றமிழ்மா மதுரை
பெரியீர் வழுதிப் பெயரோ டமர்ந்தீர்
விரியுங் கடலை வேல்கைக் கொண்டே
இரியும் படியே செய்தீர் இறையே

97. இறையே இசைகேட் டுருகும் எந்தாய்
முறையால் முனிநா ரதனார் முற்றும்
மறையார் வேள்வி வருமே டத்தைக்
குறையில் ஊர்தி எனவே கொண்டீர்

98. கொண்டீர் தமிழிற் குறையா ஆர்வம்
மண்டும் மதுரை வணிகர் குடியில்
தண்டா அன்பாற் தலைவா போந்தே
கண்டீர் பொருணூற் பொருளே தகவே

99. தகவே தவமே தனமே அழகே
அகமே வியசீர் அரசே அமிர்தே

இகமீ தினிலே எமையாள் பரனே
அகமே நொந்தேம் அருளாய் அண்ணால்

100. அண்ணால் நின்றன் அடிமை அவலம்
எண்ணாய் எண்ணாய் இதுவெ முறையோ
வண்ணச் செஞ்சொல் மாலை கொள்வாய்
நண்ணிப் பணிவோம் நாம்சந் நிதியே.

- வேறு -

வாழி மாமழை வாழிய ஆனினம்

வாழி நல்லறம் வாழிய செந்தமிழ்

வாழி எங்கள் சிவநெறி வைகலும்

வாழி சந்நிதி வள்ளல் தாளே.

சுபம்.

அணிந்துரை

(கலாநிதி பண்டிதமணி, மூதறிஞர் சிவத்திரு க. வைத்தீசுவரக்குருக்கள், காரைநகர்)

முருகன் குறிஞ்சிக் கடவுள் "சேயோன் மேய மைவரை உலகம்" என்பதனால் அது விளங்கும். பண்டை நாளில் அவன் எழுந்தருளியிருக்கும் திருத்தலங்கள் ஆறுபடை வடுகள் எனப்பட்டன. அவை திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழநி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை என்பனவாம். குறுந்தொகை எனும் சங்க நூலில் "தாமரையொத்த அழகிய திருவடியும், பவளத்தை ஒத்த திருமேனியும், குன்றிமணியை ஒத்த ஆடையும், முருகன் திருக்கரத்தில் நெடு வேலையும் சேவல் கொடியையும் உடையவன்" என்று சொல்லப்படுகிறது.

தமிழகத்தில் ஆறுபடை வடுகளைத் தவிர மேலும் கணக்கற்ற முருகன் திருத்தலங்கள் உண்டு. ஈழ நன்நாட்டிலும் கதிர்காமம், மண்டூர், வெருகல், நல்லூர், மாவிட்டபுரம், தொண்டமனாறு முதலிய இடங்களிலும் முருகன் திருக்கோயில்கள்

உண்டு. தொண்டைமனாற்றில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் முருகன் செவ்வேற் பெருமான் என்றும் அழைக்கப்படுவான். தமிழகத்தில் திருச்செந்தூர் முருகன் கடலோரத்தில் இருந்து அருள் பாலிப்பது போலச் சந்நிதி முருகனும் தொண்டைமனாற்றின் கரையிலிருந்து பக்த கோடிகளுக்கு இட்டசித்திகளை வழங்கி அருளாட்சி புரிந்து வருகின்றான்.

சந்நிதி முருகனுக்கு அன்பர் மயில்வாகனனார் அந்தாதித் தொடையில் அமைந்த பாமாலை சூட்டிப் பரவுகிறார். இவர் இச்சொன்மாலை அன்றி பக்திப் பனுவல்கள் வேறு பலவும் ஆக்கியுள்ளார். அண்மையில் விசுவேசர் புராணம் எனும் நூலை 1320 மரபுவழிக் கவிதைகளால் புனைந்து வெளியிட்டுள்ளார். "தேசுற எழுதுதல், செய்யுள் யாத்திடுதல், செப்புதல் எனும் மூன்றிலும் நிரம்பிய ஆற்றல உள்ளவர்கள் ஒருசிலர். அவர்களுள் இவர் முன்னிலையில் திகழ்கின்றார்.

சந்நிதி முருகன் செஞ்சொன் மாலையில வரும் செய்யுள்கள் "செறிவே, தெளிவே, சமநிலை, இன்பம், ஒழுகிசை" முதலிய சொல் அணிகளும் உவமை உருவகம் முதலிய பொருள் அணிகளும் கொண்டுள்ளன. சுருங்கக் கூறின் இன்நூல் சொன்னயம், பொருள் நயம், சந்த இன்பம், உணர்ச்சி பாவம் என்பன அடங்கியுள்ளன. எடுத்த எடுப்பிலேயே "சந்நிதி அரசே" என்று தொடங்கும் பாடலில் 'இதயத்தளி' என்னும் தொடரில் இதயத்தை - இருதயத்தைக் கோயிலாக (தளி) உருவகிக்கின்றார். விரிப்பின் பெருகும். பெரியோர்கள் "உள்ளம் பெருங்கோயில்" என்று கூறுவதும் அறிதற் பாலதாம்.

அன்பர்கள் அடியார்கள் இந்த நூலை படித்து, சந்நிதி வேலோன் திருவருள் பெற்று உயர்வார்களாக.

"வாழி சந்நித வள்ளல் தாளே"

சுபம்.

காப்பு

சீரார் குடிலைச் செம்பொருளோனே

தாரார் சந்நிதி முருகன் தாட்குப்

பேரார் செஞ்சொன் மாலை சூட்ட

நேராய் வந்தென் உள்நின் றருளே.